**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் நாள்,**
**CC.151 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.02.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வி.சேகர் | வயது | : | 63 |
| த.பெ | : | திரு. வேலு | நிலை | : | **PW-31 (LW-31)** |

**A1 to A5 are present with counsel. Learned APP is present.**

**1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை (Ex.P-86) பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் 15-11-2013 அன்று பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் 9 நபர்கள்மீது வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 9 நபர்களில் 6 நபர்கள் நீக்கப்பட்டு நீக்கல் அறிக்கை (Ex.P-99) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.86-ல் இவ்வழக்கின் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளின் பெயர் சேர்க்கப்படவில்லையென்றால் சரிதான். பரங்கிப்பேட்டை காவல் நிலையத்திலிருந்து கடலூர் மாவட்ட குற்றப்பிரிவிற்கு இவ்வழக்கின் புலன் விசாரணையானது மாற்றப்பட்டபிறகு 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் கொடுக்கப்பட்ட 6 மாதத்திற்குபிறகுதான் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி இவ்வழக்கின் புலன்விசாரணை மாவட்ட குற்றப்பிரிவிற்க்கு மாற்றப்பட்டபிறகு 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளின் பெயர் சேர்க்கப்பட்டது.

2) அ.சா.ஆ.3-ல் (புகார்மனு) 29-10-2013 அன்று சிதம்பரம் தாசில்தார், பரங்கிப்பேட்டை வருவாய் ஆய்வாளர் மற்றும் அகரம் கிராமத்தின் VAO ஆகியோர் NGT-South Zone தீர்ப்பாணை நகலினை கொடுத்து 02-11-2013 வரை வியாபாரத்தினை நிறுத்த சொன்னார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.3-ல் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு எந்த புகாரும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 31-10-2013 அன்று அ.சா.1 தன்னுடைய அ.சா.ஆ.3-ன்

புகார்மனுவில் புகாரில் குறிப்பிட்டுள்ள நபர்கள் தனது பெட்ரோல் பங்கை தீ வைத்து எரிக்கப்போவதாக தெரியவந்தது பாதுகாப்பு வேண்டி பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தி புகார் கொடுத்து ரசீது பெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான், புகார்மனுவின் அடிப்படையில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

3) 31-10-2013 அன்று கொடுத்த புகார்மனுவில் அ.சா.1 29-10-2013 அன்று நடந்த சம்பவங்களை சொல்லவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னால் கைப்பற்றப்பட்ட NGT-South Zone-ன் தீர்ப்பாணையானது டிராபிக் ராமசாமி Vs DRO Cuddalore விண்ணப்ப எண்.77/2013 (PMO-1/அ.சா.7) என்ற ஆவணத்தின் உண்மையான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, அது **அ.சா.ஆ-81 ஆக** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. NGT-South Zone-ன் விண்ணப்ப எண். 77/2013 பொய்யாவணமாக புனையப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு NGT South Zone-க்கு ஏதேனும் தகவலோ அல்லது கடிதமோ கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அவ்வாறு NGT-க்கு எந்த கடிதமும் தகவலும் கொடுக்கப்படவில்லை என்றாலும் அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால் இந்நீதின்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. NGT South Zone-க்கு தகவல் கொடுக்கப்பட்டது சம்மந்தமாக அ.சா.21 S.குமார் (துணை பதிவாளர் NGT-South Zone) தனது 03-03-2021 அன்று அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளார். NGT -South Zone-க்கு கொடுக்கப்பட்ட கடிதம் அ.சா.21-ன் மூலமாக இந்நீதின்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, இவ்வழக்கிற்கு அந்த ஆவணம் தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யப்படவில்லை.

4) NGT-South Zone விண்ணப்ப எண் 77/2013-ன் உண்மையான வழக்கு ஆவணமானது அ.சா.21-ன் மூலமாக இந்நீதின்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, கைப்பற்றுதல் மகஜர் மூலமாக அந்த ஆவணம் கைப்பற்றப்பட்டு படிவம் 91-ன் மூலமாக இந்நீதின்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. டிராபிக் ராமசாமி Vs DRO Cuddalore (PMO-1) ஆவணமானது 1-ஆம் எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம்தான் சிதம்பரம் தாசில்தார், பரங்கிப்பேட்டை வருவாய் ஆய்வாளர், அகரம் VAO மூலமாக அ.சா.1-ற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1-ஆம் எதிரியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட PMO-1 ஆவணமானது அரசு அதிகாரிகளான சிதம்பரம் தாசில்தார், பரங்கிப்பேட்டை வருவாய் ஆய்வாளர், அகரம் VAO ஆகியோர்கள் மூலமாகத்தான் அ.சா.1-ற்கு சென்றுள்ளது என்றாலும் அவ்வாறு அ.சா.1-ற்கு கொடுக்கப்பட்ட அந்த ஆவணமானது கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான். 29-10-2013 அன்று அரசு அதிகாரிகள் கொடுத்த NGT-South Zone ஆணையானது பொய்யாவணம் என்று தெரிந்தபிறகு

அதுப்பற்றி அ.சா.1-னிடம் சொன்னபிறகும் அந்த அரசு அதிகாரிகளால் அந்த பொய்யாவணத்தை புனைந்த நபர்களின்மீது புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை.

5) NGT -South Zone விண்ணப்ப எண். 77/2013 ஆணையானது பொய்யாக புனையப்பட்டது குறித்து தகவல் வந்தபிறகும் NGT-South Zone அதிகாரிகளால் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளின்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் NGT–Delhi மூலமாக ஆஜர் எதிரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி விசாரணையில் நான் பங்கேற்றேனா என்றால் பங்கேற்றேன். NGT–Delhi மூலமாக செய்யப்பட்ட நடவடிக்கைகளில் எதிரிகளின்மீது குற்றம் நிருபிக்கப்பட்டவில்லை என்றால் சரியல்ல, அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் DCB Cuddalore-ல் பணியிலிருந்த 2014-ஆம் ஆண்டுவரை மேற்படி நடவடிக்கை நிலுவையில்தான் இருந்தது.NGT–Delhi விசாரணையில் 1,3,4,5 எதிரிகளின்மீது குற்றம் நிருபிக்கப்படவில்லை என்றாலும் அந்த பொருண்மையினை இந்நீதிமன்றத்தில் மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) 1,3,4,5 எதிரிகளிடம் பெற்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக அரசு அதிகாரிகள்தான் உள்ளனர் என்றால் சரிதான். 1,3,4,5 எதிரிகள் எந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் தயாரிக்கப்பட்டது என்றாலும் அதன் காரணமாகத்தான் அரசு அதிகாரிகள் சாட்சிகளாக குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல.பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் அ.சா.ஆ.3-ஆன புகார்மனுவினை அ.சா.1 கொடுத்தபிறகு பரங்கிப்பேட்டை போலிசார் பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் அ.சா.1-ன் உறவினர்களான பாலு மற்றும் கமலநாதன் ஆகியோரை சாட்சிகளாக போட்டுள்ளனர் என்றால் ஆவணங்களின் அடிப்படையில் பார்த்தால் சரிதான்.

7) 1-ஆம் எதிரி அரசு அதிகாரிகளுக்கு அனுப்பியதாக சொல்லப்படும் ஆவணத்தை Ewart Telecom browsing center மூலமாக கைப்பற்றப்பட்டது என்றாலும் அது சம்மந்தமாக அ.சா.ஆ.83 -5 வரிசைகள் ஆவணம் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஆவணம் கைப்பற்றப்பட்டதாக சொல்வது சரியல்ல, அ.சா.ஆ.83 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பது சரிதான். Ewatt Telecom browsing center-ல் PMO -1 ஆவணத்தைதான் தயார் செய்வதற்கு அந்த center-ரை பயன்படுத்தும்போது செய்யப்பட்ட உள்நுழைவுபதிவேடு ஆவணத்தைதான் கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அ.சா.ஆ.83 -5 வரிசைகள் கொண்ட ஆவணத்தில் முதல் வரிசையில் மேலிருந்து கீழாக 1-6 வரையிலான column கொண்ட தாளைத்தான் நாங்கள் கைப்பற்றினோம் என்றால் சரிதான்.

அ.சா.ஆ.83, 5 வரிசைகள் கொண்ட ஆவணத்தில் முதல் வரிசையில் இடமிருந்து வலமாக 1- 10 வரையிலான column கொண்ட தாளைத்தான் நாங்கள் கைப்பற்றினோம் என்றால் சரிதான். அ.சா.ஆ.83 5 வரிசைகள் கொண்ட ஆவணத்தில் 3-ஆவது வரிசையில் 7 -ஆவது நபராக 1-ஆம் எதிரியின் பெயர் வழக்கிற்காக வேண்டுமென்றே எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த 3-ஆவது வரிசையில் எந்த நபருக்கும் அடையாள அட்டை சம்மந்தமான எந்த பதிவும் இடமிருந்து வலமாக 7-ஆவது columnத்தில் இல்லை என்பதிலிருந்து அது வழக்கிற்காக வேண்டுமென்றே தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ***(மேற்படி இரு வினாக்களை அ.சா.24 சாட்சியிடம் மட்டுமே கேட்கப்பட வேண்டும் என்றும் புலன் விசாரணை அதிகாரியிடம் கேட்டு முரண்படுத்த முடியாது என்றும் அரசு தரப்பில் ஆட்சேபணை எழுப்பப்பட்டது.)***

*8)* அனைத்து ஆவணங்களையும் முறையாக பரிசீலனை செய்தபிறகுதான் இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.83 5 வரிசைகள் கொண்ட ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் சாட்சிகளாக அ.சா.1ன் ஊர்க்காரர்கள் பாலு மற்றும் கமலநாதன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் பாலு மற்றும் கமலநாதனை சென்னைக்கு அழைத்து சென்று Ewatt Telecom browsing center வைத்து கையொப்பம் பெற்றோம் என்றால் சரிதான். அ.சா.ஆ.83 ஆவணம் சம்மந்தமாக கைப்பற்றுதல் மகஜர் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.83 ஆவணத்தில் Ewatt Telecom browsing center உரிமையாளரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர், வரைபடம் மற்றும் அ.சா.ஆ.83 ஆவணங்களின் பாலு மற்றும் கமலநாதன் என்ற இருவர் மட்டுமே சாட்சிகளாக உள்ளனர் என்றால் சரிதான். Ewatt Telecom browsing centerல் அ.சா.ஆ.83 ஆவணத்தில் கைப்பற்றும்போது தனிநபர் சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சாட்சி கையொப்பம் போட யாரும் முன்வராததால் சாட்சி கையொப்பம் போடப்படவில்லை. மேற்படி விவரங்கள் Case Diary-ல் பதியப்படவில்லை என்றால் அதுபோன்ற விவரங்கள் பொதுவாக Case Diary-ல் பதியப்படுவதில்லை. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.86 15-11-2013 அன்று பதியப்பட்ட நிலையில் 20-11-2013 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளை இவ்வழக்கில் சேர்ப்பதற்காக என்னுடைய புலன்விசாரணையில் அ.சா.1,2,3 ஆகியோரிடம் எந்த ஒரு Further statementம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, வாங்கியுள்ளேன். முதல் தகவல் அறிக்கை அ.சா. ஆ.86ல் குறிப்பிடப்பட்டுள்ள 9 நபர்களில் 6 நபர்கள் அ.சா. ஆ.99ன்மூலமாக நீக்கப்பட்டுள்ள நிலையில் அதுசம்மந்தமாக அ.சா.1டம் எந்த வாக்குமூலமும் பதிவு

செய்யப்படாமல் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ 86ல் குறிப்பிடப்பட்ட 6 எதிரிகளை நீக்கம் செய்து நீக்கல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், என்னுடைய புலன் விசாரணையில் அ.சா,ஆ. 99ல் நீக்கப்பட்ட எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால் அவர்களை நீக்கி அறிக்கையினை தாக்கல் செய்தேன். அ.சா.1ற்கும் 3,4, 5 எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றாலும் அவர்கள் உறவுக்காரர்கள் என்றாலும் சரிதான். 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் அ.சா.1ன் ஊரைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் அ.சா.1ற்கு சொந்தமான பெட்ரோல்பங்கிற்கு அருகே பெட்ரோல் பங்க் வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு 1 மாதத்திற்குமுன்புதான் அ.சா.1 பெட்ரோல் பங்க் தொடங்கினார் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு 4-5 ஆண்டுகளுக்குமுன்பே1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் பெட்ரோல்பங்க் வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். அ.சா.1 பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் 31-10-2013 அன்று கொடுத்த புகாரை 3,4,5 எதிரிகளுக்கு எதிராகத்தான் கொடுத்துள்ளார் என்றாலும் 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளுக்கு எதிராக கொடுக்கவில்லை என்றாலும் சரிதான்.

10) இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காகவும் அ.சா.1-ற்கு சாதகமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1-ற்கும் 3,4,5 எதிரிகளுக்கும் உள்ள நிலத்தகராறு பிரச்சனையில் அவர்களை பழி வாங்கும்நோக்கோடு 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளின்மீதும் அ.சா.1ன் தூண்டுதலால் இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**